# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1635/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுவாதி | க-பெ | வேல் பாண்டி |
| ஊர்: | : | உச்சி புளி | | |
| வயது: | : | 26/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.05.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் உச்சி புளியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா1 மற்றும் எதிரியை தெரியும். அசா1 க்கும் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு தற்போது சமாதானம் ஆகிவிட்டது. எதிரி மீது நடவடிக்கை எதுவும் தேவையில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 21.08.2020 அன்று காரைக்குடி தெற்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 20.08.2020 அன்று இரவு 9.00 மணிக்கு நான் அசா1 மற்றும் எனது அப்பா மூவரும் நடந்து சென்றபோது அங்கு வந்த எதிரி ஒரு கல்லை எடுத்து அசா1 ஐ பார்த்து அசிங்கமாக திட்டினார் என்றும் கொலை மிரட்டல் செய்து கல்லை விட்டெறிந்ததில் கல் அசா1 ன் நெற்றியில் வலது பக்க கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது என்றும் நாங்கள் சத்தம் போடவும் எங்களை கொலை மிரட்டல் செய்துவிட்டு எதிரி ஓடிவிட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகி உண்மையை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.13 12:14:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1635/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வீரபாண்டி | த-பெ | சின்னத்தம்பி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 44/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.05.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அசா1 மற்றும் எதிரியை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 3**. போலீசார் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். எதற்காக செய்தேன் என்றால் தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 21.08.2020 அன்று காரைக்குடி தெற்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது கடந்த 21.08.2020 அன்று காலை 9.00 மணிக்கு காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு பின்புறம் நடந்த குற்ற சம்பவம் தொடர்பாக சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வைமகஜர் ஆவணத்தில் இரண்டாவதாக சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.13 12:14:46 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.